## IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

O.S.NO.77/2021

| | |
|---|---|
| Deposition of Witness | : PW-1 |
| Name | : சாந்தமூர்த்தி |
| Father's Name /W/o | : ஏகநாதன் |
| Religion | : இந்து |
| Caste | : - |
| Calling | : - |
| Address | : களத்தூர் கிராமம், நெமிலி வட்டம். |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 07.11.2022.

குறுக்கு விசாரணை

சாட்சியம் அளிப்பதற்கு என் தந்தை அதிகாரம் கொடுத்ததாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளதற்கு அந்த ஆதராம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் தந்தை சாட்சியம் அளிப்பதற்கு தனியாக எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் உள்ளதை படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன் என்றால் ஆம். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள பரிகார படி தான் நான் தீர்ப்புக் கேட்கிறேன் என்றால் ஆம். என் பதிலில் எந்த மாற்றமும் இல்லை என்றால் இல்லை. சர்வே எண்.105/1 சொத்தின் விவரம் 1 ஏக்கர் 25 சென்ட் என்பது சரிதானா என்றால் சரிதான். சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள ஆவண எண்.979/1956 தேதி 04.05.1956 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளேன். அசல் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வா.சா.ஆ.5 10.11.2021 தேதியிட்ட அறிவிப்பை அனுப்பி உள்ளேன் என்றால் ஆம். அந்த அறிவிப்பில் தாவா சொத்தை காலி செய்து சுவாதீனம் ஒப்படைக்கவேண்டும் என்று அறிவிப்பை அனுப்பி உள்ளேன் என்றாலும் வழக்கை அந்த பரிகாரத்திற்காக கேட்கவில்லை என்றால் சொத்தை திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்று தான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். சொத்தை

திருப்பி சுவாதீனம் ஒப்படைக்க வேண்டும் என்று பரிகாரம் கேட்டுள்ளேனா அல்லது விற்க்ககூடாது என்று பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் சாட்சி முதலில் சொத்தை திருப்பி சுவாதீனம் ஒப்படைக்க வேண்டும் என்று தான் கேட்டுள்ளேன் என்று பதில் அளித்துவிட்டு பிறகு விற்பனை செய்ய முயற்சித்தால் அந்த பரிகாரமும் கேட்டதாக சொல்கிறார். என் சொத்து எனக்கு வேணும் என்று தான் பரிகாரமா என்றால் ஆம். அதற்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம். பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 5-ல் என்னுடைய தாத்தா ஆறுமுகம் தான் இந்த சொத்தை பெற்றார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆம். என் தாத்தா வாங்கிய சொத்து தான். என் தாத்தா ஆறுமுகம் அவர் தகப்பனார் குள்ளன் என்பவரிடமிருந்து சொத்தை பெற்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆம். கிரையத்திற்கு அவர் வாங்கியிருந்தார். ஆறுமுகத்துடன் பிறந்தவர் தான் பிரதிவாதிகளின் தகப்பனார் ஏழுமலை என்றால் ஆம். கிரையம் பெற்ற காலத்தில் ஆறுமுகமும், ஏழுமலையும் கூட்டு குடும்பமாக இருந்தார்களா என்றால் எனக்கு தெரியவில்லை. 1956-ல் நடந்த விவரங்களை நான் பிறக்காததால் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் என் அப்பா சொல்லி தான் தெரியும். என் தந்தை சொல்லி தான் தாவாவை தாக்கல் செய்துள்ளேன். என் தந்தை சொல்லி தான் இந்த வழக்கை தாக்கல் செய்ததாக தாவாவில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இருவரும் சேர்ந்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க கு.வி ஒத்திவைக்கப்படுகிறது)